பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ, எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 12உ (28—9—67) வியாழன் வெளியூர் : புரட்டாசி 13உ (29—9—67) வெள்ளி [இதழ் : 89

## தமிழக முதலமைச்சர் திரட்டும் துயர் தணிப்பு நிதி

★

சென்னை, செப். 28—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் திரட்டிவரும் தீ விபத்துத் துயர் துடைப்புச் சிரமைப்பு நிதிக்கு 26—9—67 வரையில் ரூ. 29,39,878.78 சேர்ந்திருக்கிறது.

### காங்கிரசு மாநிலத்தில் காந்தியார் பிறந்த தின 'ஸ்பெஷல்'!

## 'மது வேண்டாம்' என்பதை உணர்த்த முதலமைச்சர் வீட்டுமுன் 'தொழுகை'!

மகாராட்டிரத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ஜீவராஜ் மேத்தா, அக்டோபர் 2-ந்தேதியன்று முதலமைச்சர் இல்லத்தின்முன் ஒரு 'தொழுகை ஆர்ப்பாட்டம்' நடத்த இருக்கிறார்!

'இது ஒரு ஆர்ப்பாட்டமோ, சத்தியாக்கிரகமோ இல்லை' என்பதை விளக்கியிருக்கும் அவருடன், மற்றும் சில காங்கிரசுத் தலைவர்களும், பொது மனிதர்களும், 'தொழுகை'யில் சேர்ந்து கொள்கிறார்கள்!

காந்தியார் பிறந்த தினமான அன்று, 'முதலமைச்சர் நாயக்குக்கு, மதுவிலக்கை ரத்துசெய்யவோ தளர்த்தவோ கூடாதென்பதை ஆண்டவன் உணர்த்தட்டும்' என்று கோரி அவர்கள், 'தொழுகை' நடத்தப் போகிறார்கள்!

இத்தொழுகை ஒரு முறையான துவக்கமே என்றும், அதற்குப் பின் மாநிலமெங்கும் பரவ இருக்கிறதென்றும் தெரியவருகிறது!

மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள 'ஓட்டை'களை அடைத்து மதுவிலக்கினைத் தீவிரமாக்கும்படி எல்லாப் பொது அமைப்புக்களையும் அவர்கள் கேட்டுக்கொள்ள இருக்கின்றனர்!

## 'சட்டைப் பையில் விலகல் கடிதம்-- பதவி விலக எப்போதும் தயார்'

"தொழிலாளர்களின் நலனுக்காக என்னால் பாடுபட முடியாது என்று தெரிந்த அடுத்த நிமிடமே நான், எனது பதவியை இராஜினாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன்!

"என்னுடைய பதவி விலகல் கடிதம்கூட எப்போதும் என் சட்டைப் பையில்தான் இருக்கிறது!

'நான், ஒரு 'நாணயமான தொழிலாளி'; தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய இயலாத வகையில் நிலைமை இருக்குமானால், பதவி எனக்குப் பெரிதல்ல"

என்று துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, பம்பாய் நகரில், போக்குவரத்துத் தொழிலாளர் சங்க வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

## ஷேக் அப்துல்லா விடுதலை பெறுவது உறுதியாகிறது!

நவம்பர் திங்களுக்குப் பிறகு காஷ்மீரத்துத் தலைவர் ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்படுவார் எனத் தெரிகிறது.

தலைமையமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின்னர் காஷ்மீர் முதலமைச்சர் சாதிக், இத்தகவலை தெரிவித்துள்ளார்.

"ஷேக் அப்துல்லா உடனேயே கூட விடுதலை செய்யப்படலாம்; ஆனால், அது, காஷ்மீரத்துக்கு நவம்பர் வரையில் வந்துபோகும் உல்லாசப் பயணிகளுக்கு இடையூறாக இருக்கும்; அத்துடன், நவம்பருக்குப்பின் பனிக் காலமாகி விடுவதால் அந்நிய ஆபத்துக்கள் ஏதும் அப்போது இருக்காது—அதுவே அவரது விடுதலைக்கு ஏற்ற காலம்"

என்றும் சாதிக் விளக்கியிருப்பதாகத் தெரிகிறது.

## அண்ணா டில்லி பயணம்

அறிஞர் அண்ணா அவர்கள் 29-9-67 காலை 9-25 மணிக்கு வானூர்தி மூலம் டில்லி புறப்பட்டுச் செல்கிறார். அக்டோபர் முதல் நாள் மாலை 1-30 மணிக்கு சென்னை வந்தடைவார்.




மாநில அரசாங்கங்கள் கேட்டால், 'நிதி வசதி இல்லை' என்கிறார்கள்! மத்திய அமைச்சர்களும், பொருள் தேடி வெளிநாடுகளுக்குப் போகிறார்கள்!

ஆனால், உள்நாட்டிலேயே கொடுக்க வேண்டிய 'மகாராஜா'க்களிடமிருந்து சரிவர வாங்கினாலே போதும்—பற்றுக்குறை ஒழிய!

வருமான வரி கொடுப்பவர்களெல்லாம் ஓரளவு வசதி படைத்தவர்கள்! மாதாந்திரச் சம்பளம் பெறுபவர்களிடத்தில் வரியை எடுத்துக் கொண்டுதான் மீதியைக் கொடுக்கிறார்கள்!

ஆனால், மற்றைய வருமான வரிக்காரர்களிடமிருந்து மத்திய அரசுக்கு வர வேண்டியது மட்டும் ரூ. 500 கோடி!

இதில் ரூ. 100 கோடி, 'வராது' என்று மத்திய அரசு கைகழுவிவிட்டதாம்!

மீதி உள்ளதில் ரூ. 350 கோடி, இலட்சக்கணக்கான பேர்களிடமிருந்து வசூலாக வேண்டிய ஒன்றல்ல; சுமார் 4000 பேர்களிடமிருந்து வாங்கப்பட வேண்டியதுதான்! ஆனால், முடியவில்லை!

இவர்களெல்லாம் துணிவாக 'முடியாது'—'கொடுக்கும்படி வழிவகை இல்லை'—'வா கோர்ட்டுக்கு'—என்று, மத்திய அரசைச் சவால் விட்டுக் கொண்டிருப்பவர்கள்!

'பெறுமானமுள்ள' மனிதர்களாயிற்றே—அதனால், மத்திய அரசு இதுவரை முடியாமல் முயன்றுகொண்டிருக்கிறது!

## 'கொள்முதல் விலையை உயர்த்துவது பதுக்கலுக்கு ஊக்கம் அளிக்கும்'

### திட்டக் குழுத் துணைத் தலைவர் கருத்து

புதுடில்லி, செப். 27—

"உணவுத் தானியக் கொள்முதலுக்குக் கடந்த ஆண்டு தரப்பட்ட விலையைவிட அதிகமாகக் கொள்முதல் விலை தருவதைத் திட்டக் குழு விரும்பவில்லை; விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த அவசியத்தை வைத்துத் திட்டக் குழு அப்படிக் கருதுகிறது.

"கொள்முதல் பருவ காலத்தில், கொள்முதல் விலைகள் வேறுபட்டிருக்கக்கூடாது; ஏனெனில், அது, கையிருப்பைப் பதுக்கி வைக்கும் உணர்ச்சியை ஊக்குவிக்கும்"

என்று, இன்று இங்கு வெளியான ஓர் அறிக்கையில் திட்டக் குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் டி. ஆர். காட்கில் கூறியுள்ளார்.

கொள்முதல் விலை சம்பந்தமாக திட்டக் குழுவின் கருத்தை விளக்கி அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"ஒவ்வொரு மாநில அரசும் ஒரு சீரான விலையில் கொள்முதல் செய்யவேண்டும். இக்கொள்முதல் விலை அந்தப் பருவம் முழுவதற்கும் பொருந்த வேண்டும்.

"விலைகளில், பின்னர் கூடுதல் செய்வது பதுக்கலுக்கு ஊக்கம் அளிக்கும்.

"சென்ற ஆண்டு இருந்த கொள்முதல் விலையைக் காட்டிலும் கூடுதலாக விலையிருப்பது நல்லதல்ல."

## 'மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்துவது பற்றிக் கலந்தாலோசிப்பேன்'

### டில்லி செல்வதன் நோக்கம்-- முதலமைச்சர் விளக்கம்

சென்னை, செப். 27—

நாளை டில்லி செல்லவிருக்கும் முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழ் நாட்டில் மூடப்பட்ட மில்களை எடுத்து நடத்துவது பற்றியும், இதற்காக ஒரு குழு அமைப்பது பற்றியும், மற்றும் இவை தொடர்பானவைகள் பற்றியும் மத்திய அமைச்சர் தினேஷ் சிங்குடன் கலந்தாலோசிக்கப் போவதாகச் செய்தியாளர்களிடம் கூறினர்.

### நாளை

மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள 'நம் நாடு' ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ, எம்.பி. அவர்கள் 'ஜெர்மனி' பற்றி எழுதும் கட்டுரை நாளை (29—9—67) 'நம் நாடு' இதழில் இடம் பெறும்.

## வாக்குச்சீட்டிலும் கள்ளக் கடத்தல்!

### நான்காம் பொதுத் தேர்தல்: சில சுவையான தகவல்கள்

1967 பொதுத் தேர்தலில் 30,000 வாக்குச் சீட்டுக்கள் பெட்டிக்குள் போடப்படாமல் வெளியே கொண்டுவரப்பட்டிருக்கின்றன!

தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கை, மேலும் சில சுவையான தகவல்களையும் தந்திருக்கிறது.

நாடாளுமன்றத்துக்குப் போடப்பட்ட மொத்த வாக்குச் சீட்டுகள் 14,58,66,510; செல்லுபடியாகாத வாக்குகள் 68,30,460; மொத்தம் விநியோகிக்கப்பட்ட சீட்டுகள் 15,27,24,611; கணக்கில் வராத சீட்டுகள் 27 641.

சட்டமன்றத் தேர்தல்களுக்காக போடப்பட்ட வாக்குச் சீட்டுகள் 14,32,56,509; செல்லுபடியாகாதவை 85,35,032; மொத்தம் விநியோகிக்கப்பட்ட சீட்டுகள் 15,17,93,713; கணக்கில் வராதவை 2,172.

## வாழ்க்கைச்செலவுகள் உயர்ந்திருக்கிறது --

### வாழ்க்கைத்தரம் தாழ்ந்துவிட்டது

மக்களுக்குச் சனநாயகத்தில் பற்று இல்லாமலிருப்பதற்கு இதுவே காரணம்!

"நாடு முழுவதிலும் மக்களுக்குப் பாராளுமன்ற சனநாயகத்தில் உள்ள பிடிப்பு தளர்ந்துவருகிறது. 'சனநாயகமும், பாராளுமன்ற ஆட்சி முறையும் நிலைத்திருக்குமா?' என்றுகூட அவர்கள் ஐயுறுகின்றனர். அந்த அளவுக்கு நாட்டில் அதிருப்தி நிலவுகிறது.

"மக்களது வாழ்க்கைத்தரம் உயராமல் வாழ்க்கைச் செலவு மட்டும் உயர்ந்துவந்திருப்பதே இதற்கு முக்கியக் காரணம்; வாழ்க்கைச்செலவைக் கொண்டே ஒவ்வொன்றும் மதிப்பிடப்படுகிறது; வாழ்க்கைத்தரத்தைக்கொண்டு மதிப்பிடப்படுவதில்லை; இதன் விளைவாக அதிருப்தி எழுந்துள்ளது"

என்று நிர்வாகச் சீரமைப்புக் குழுத் தலைவர் அனுமந்தையா, புதுடில்லியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். அவர் மேலும் கூறியதாவது:—

"சமுதாய வளர்ச்சித் திட்டம் என்பதன் பெயரால் நாடு முழுவதிலும் செலவழிக்கப்பட்ட ரூ. 100 கோடி, நாணயப் புழக்கத்தைத்தான் அதிகப்படுத்தியது; உண்மையான முன்னேற்றம் ஏதும் கிடைக்கவில்லை; பண வீக்க நிர்ப்பந்தங்களை இது அதிகப்படுத்தி அதன் மூலம் முன்னேற்றத்தை இது தடுத்து வருகிறது."

# 'கட்டாயக் கதர் விற்பனை இல்லை'

## 'அன்பான வேண்டுகோள் மூலமே அதிகம் விற்க முடியும்'- அமைச்சர் முத்துசாமி விளக்கம்

கோவை, செப். 26—

அரசு ஊழியர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் கதர் விற்பனை செய்வது இவ்வாண்டு கட்டாய அடிப்படையில் இருக்காது" என்று அமைச்சர் முத்துசாமி தெரிவித்தார்.

இங்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கதர்த் துறையை ஒழிக்கும் எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.

"அத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் கூடுதலான பயனை அடையும் வகையில் அந்தத் துறையை மேலும் திறமையாகச் செயல்படுத்தத்தான் அரசு விரும்புகிறது.

வீண் விரையத்தையும், வீண் செலவுகளையும் தவிர்க்க அரசு எண்ணியுள்ளது.

இத்துறையில் மாநில அரசுக்கு ஒத்துழைப்பு அளிப்பதாக அண்மையில் என்னைச் சந்தித்த கதர் கமிஷன் தலைவர் திரு. யு. என். தேபரும் கூறியிருக்கிருர்.

இவ்வாண்டு கதர் உற்பத்தியிலும் விற்பனையிலும் அரசு தீவிரக் கவனம் செலுத்தும்,

இவ்வாண்டு அதிகப்படியாக விற்பனையாகும் என்றும் நம்பப்படுகிறது.

அரசு ஊழியர்களைக் கட்டாயப்படுத்துவதைவிட, அன்புரிமையுடன் வேண்டிக்கொள்வதன் மூலமே கூடுதலான கதர்த் துணியை வாங்கும்படிச் செய்யலாம்."

# பயிற்று மொழி மாற்றத்தில் காலவரை கூடாது!

## என்றென்றைக்கும் ஆங்கிலம் தேவை

புதுடில்லி, செப். 25—

"இந்திய மொழியில் போதிய விஞ்ஞான—தொழில் நுட்ப நூல்கள் வெளியாகி, அம்மொழி முழு வளர்ச்சி பெறும் வரை, கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்விக்கு ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிக்கவேண்டும்"

என்று, செய்திப் போக்கு வரவுத் துறைப் பொறியர்கள் கழகம் வலியுறுத்தியுள்ளது.

"அப்படி, ஒரு மொழி வளர்ச்சி பெற்றுப் பயிற்று மொழியானுல் கூட, வெளிநாட்டு விஞ்ஞானிகளிடையே தொடர்பு கொள்வதற்கு அனைத்து நாட்டு மொழி ஒன்று தேவை" என்று அந்தக் கழகம் தெரிவித்துள்ளது.

கல்லூரியில் விஞ்ஞான—தொழில் நுட்பத் துறைகளில் பயிற்சி மொழியாக ஆங்கிலத்துக்குப் பதில் வட்டார மொழியைக் கொண்டுவருவதற்குக் காலவரை எதுவும் நிர்ணயிக்கக்கூடாது; உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆங்கிலம் கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும்" என்றும் அது வற்புறுத்தியுள்ளது.

# இந்தி வெறியர்கட்கு வி. வி. கிரி இடித்துரை

பம்பாய், செப். 26—

"அறிவு வளர்ச்சிக்குத் துணையாகவுள்ள ஆங்கிலத்தைக் கைவிடக்கூடாது. இந்திக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுப்பது அதற்கு கெடுதலையே விளைவித்திருக்கிறது. இந்திக்காகப் பிரச்சாரம் செய்யும்போது ஆங்கிலத்தை ஏன் விரோதியாகக் கருதவேண்டும்?"

என்று குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி வினவினுர்.

## மாநகராட்சி மன்றக் கூட்டம்

### சி. ஆர். பாலசுந்தரம் மறைவுக்கு இரங்கல்

சென்னை, செப். 26—

சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டம் இன்று, துணை மேயர் டி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கூடியபோது, முன்னுள் மன்ற உறுப்பினர் திரு. சி. ஆர். பாலசுந்தரம் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறியதும் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

# ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதி

## தமிழக அரசு திட்டம்

கோவை, செப். 26—

"தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் எல்லைகளை வரையறுக்க எல்லை நிர்ணயக் குழு ஒன்று நியமிப்பது குறித்து அரசு ஆய்வு செய்துவருகிறது"

என்று, உள்ளாட்சித்துறையமைச்சர் மா. முத்துச்சாமி கூறினுர்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தற்போதுள்ள ஊராட்சி அமைப்பு முறையை நீக்கிவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை.

ஊராட்சிகளுக்காக ஆண்டொன்றுக்கு செலவிடப்படும் சுமார் ரூ. 57 கோடி, முழுமையாக மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியங்களில் நிதியைச் செலவிடுவதில் சில ஊராட்சிகளுக்கு தகுந்த திட்டங்களை அரசு கூறும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓராண்டு முன்னேற்றத் திட்டத்திற்கு அரசு திட்டம் தயாரித்து வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு பணம் ஒதுக்கும்."

# மங்கையருக்குப் பதிலாக 'மா'வின் தத்துவம்!

பூருனியில், வயதுவந்த பெண்களுக்குப் பஞ்சம் வந்திருக்கிறது!

திருமணம் செய்துகொள்ள ஆடவர்கள், பெண்களின்றி அவதிப்படுகிருர்கள்; இதனுல், ஹாங்காங் பத்திரிகைகளில், 'மணமகள் தேவை' விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன!

இதற்கு அவர்கள் பெறுகின்ற பதில்—பிரதிபலிப்பு, பரிதாபகரமாக இருக்கிறது!

மா சே-துங்கின் உருவம்—தத்துவங்கள் அடங்கிய அஞ்சல் அட்டைகள்தான் கிடைக்கின்றனவாம்!

"நாங்கள் விரும்புவது மணப்பெண்கள்! கிடைப்பதோ, மா சே-துங்கின் படங்கள்—தத்துவங்கள்—அறிவுரைகள்! என்ன பயன்!"

என்று விரக்தியடைந்துள்ளனர், பூருனி வாலிபர்கள்!

## கட்டபொம்மன் கோட்டை

"பாளையங்கோட்டையில் உள்ள கட்டபொம்மன் கல்லறையையும் கோட்டையையும் மாநில அரசு பழுதுபார்த்து தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைத்துவிடும்" என்று நெல்லை மாவட்ட ஆளுநர் திரு. எம்.எம். இராசேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# ஜெனிவா!

இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

## ஏரிக்கரையினில்!

ரோமிலிருந்து ஜெனிவா செல்கிறபொழுது, விமானத்திலிருந்து ஆல்ப்ஸ் மலைத் தொடர்ச்சியையும், பனிபடர்ந்த 'மான்ட் பிளாங்' பகுதியையும் காண முடிந்தது. மலையும் மலைச்சாரலும், ஏரியும் அழகு செய்யும் நாடு சுவிட்சர்லாந்து ஆகும்.

'ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்' என்று சுவிட்சர்லாந்து அழைக்கப்படுகிறது. பொழுது போக்குக்காகவும், ஓய்வு பெறுவதற்காகவும் மிகப் பலர் அங்கு வருகின்றனர்.

விடுதிகள் நடத்தும் தொழிலில் மட்டும் 2½ இலட்சம் பேர்கள் அங்கு ஈடுபட்டுள்ளனர்.

கோடை காலத்தில் ஏரிக்கரைகளில் தங்குவதற்கும், குளிர்காலத்தில் பனிக்கட்டியின்மீது சறுக்கு விளையாடவும் மக்கள் சுவிட்சர்லாந்துக்கு வருகின்றனர்.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஏரிகளில் பெரியது ஜெனிவா ஏரியாகும். அதன் தென் முனையில் ஜெனிவா நகரம் அமைந்துள்ளது.

பிரான்சுக்கும்—சுவிட்சர்லாந்துக்கும் எல்லையாக ஜெனிவா ஏரி இருக்கிறது.

ஜெனிவா ஏரி, அங்கு, 'லாக் லெமன்' என்றும் அழைக்கப்படுகிறது.

200 சதுரமைல் அளவுக்குப் பரந்திருக்கும் ஜெனிவா ஏரி, அமைதியும் அழகும் குடிகொண்டிருக்கும் உல்லாச வெளியாகக் காட்சியளிக்கிறது.

உல்லாச ஓடங்களும், காற்றில் அசைந்தாடும் பாய்மரங்களும், விரைந்து செல்லும் மின்விசைப் படகுகளும், அவற்றின் பின்னுல் கயிற்றைப் பிடித்தபடி நீர்ச் சறுக்கலில் செல்பவர்களும், ஆங்காங்கு காணப்படுகின்றனர்.

ஜெனிவா ஏரிக்கரையில், ஜெனிவா நகரமன்றி மறு பக்கத்தில் பிரெஞ்சுப் பகுதியில் லுசோன், மாங்ரே, சாமோன் போன்று பல ஊர்கள் இருக்கின்றன. பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் சிறு கப்பல்கள் கரையோரம் செல்கின்றன.

ஜெனிவா ஏரியின் சுற்றளவு 104 மைல்களாகும். ஜெனிவா ஏரி, சில இடங்களில் 1,000 அடி ஆழமும் இருக்கிறது.

ஜெனிவா ஏரியில் ரோன் நதி கலந்து ஜெனிவா நகரத்தில் பிரிந்து செல்கிறது.

ஜெனிவா நகரில் ஏறத்தாழ 2 இலட்சம் மக்கள் உறைகின்றனர். இவர்களையன்றி, உல்லாசப் பயணத்தில் ஈடுபட்டு பல இலட்சம் மக்கள் வருகின்றனர்.

இவ்வளவு திரளான அளவு மக்கள் பயன்படுத்தியும், ஜெனிவா ஏரியும் அதன் கரையும் தூய்மையாகப் பாதுகாக்கப்படுகின்றன. ரோன் நதி பிரிந்து செல்லும் இடத்தில், தண்ணீரில் மீன்கள் நீந்திச் செல்வது தெரியும் அளவுக்குத் தண்ணீர் மருவற்று விளங்குகிறது. அங்கு கரு அன்னங்களும் வெள்ளை அன்னங்களும் ஏராளமாக வளர்க்கப்படுகின்றன.

ஜெனிவா நகரத்தில் ஏரிக் கரையோரம் வரும்பொழுது, முதலில் காட்சி தருவது, உயரச் செல்லும் நீர் எழுச்சி ஆகும். தண்ணீர் மட்டத்திற்குக் கீழ் மின்விசை உதவியால், தண்ணீர் உயரே பீச்சப்படுகிறது!

தண்ணீர் எழுகிற உயரம் 470 அடி!

பீறிட்டுச் செல்லுகின்ற தண்ணீர், மேலே சென்று அவிழ்ந்து—கலைந்து — புகையாக - பனியாகக் கீழே கவிழ்கிறது! இரவு நேரத்தில் தனிப்பட்ட விளக்குகள் மூலம் அதை அழகுபடுத்துகின்றனர்!

தண்ணீரை 470 அடி உயரம் செலுத்த கீழே 1,360 குதிரை சக்தி உள்ள இரண்டு மின்பொறிகள் இயங்குகின்றன! தண்ணீர் 125 மைல் வேகத்தில் மேலே செலுத்தப்படுகிறது!

ஜெனிவா நீர் எழுச்சி, அந்த ஏரிக்கரையில் முக்கிய கண்காட்சிகளில் ஒன்ருக இருக்கிறது.

காலை நேரத்தில் ஏரிக்கரையைச் சுற்றிக் காண்பிக்கும் படகில் நான் சென்றேன். ஏரிக்கரையில் பல குறிப்பிடத்தகுந்த இடங்கள் இருக்கின்றன. ஆங்கிலக் கவி பைரன் வாழ்ந்த வீடு அங்கு காட்டப்படுகிறது; ஆகாகான் மாளிகை ஒன்றும் இருக்கிறது.

ஜெனிவா நகரில் நான் தங்கியிருந்த இடம், ஏரிக்கரை அருகில் உள்ள ஒரு விடுதியிலாகும். அது ஜெனிவாவின் பழைய பகுதியாகும். அங்கு ஜெனிவா பல்கலைக்கழகம் இருக்கிறது.

ஜெனிவா பல்கலைக்கழகத்தில், 'மறுமலர்ச்சி சதுக்கம்' என்று ஓர் இடம் இருக்கிறது. ஐரோப்பாக் கண்டத்தில் சமுதாயச் சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும் ஆரம்பித்த நேரத்தில், கடுமையும் கொடுமையும் மற்ற நாடுகளில் கொப்பளித்த சமயங்களில், சமுதாய வீரர்களுக்கு ஜெனிவா நகர் புகலிடம் தந்தது!

பிரெஞ்சு நாட்டில் மதப் புரட்சி செய்த கால்வின், ஜெனிவாவில் ஆரம்பித்த கல்லூரிதான் ஜெனிவா பல்கலைக்கழகமாக வளர்ந்தது!

பல்கலைக்கழகத்தில் உள்ள மறுமலர்ச்சி சதுக்கத்தில் கால்வின், பாரல், பீஸ், நாக்ஸ் போன்றவர்களின் உருவச் சிலைகளும், அவர்களின் பொன்மொழிகளும் அங்கு காட்சி தருகின்றன!

கருத்து—நம்பிக்கை—மொழி—கலாச்சார வேறுபாடுகளுக்கு மதிப்பும், இடமும் தரவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது சுவிட்சர்லாந்து ஆகும்!

அரசியல் அமைப்பில் சுவிட்சர்லாந்து ஒரு பொதுக் கூட்டாட்சி (Confederation) ஆகும். 22 'கான்டன்'கள் அந்தப் பொதுக் கூட்டாட்சியில் சேர்ந்துள்ளன!

ஆரம்பத்தில், மற்ற பேரரசுகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மூன்று 'கான்டன்'கள், கி. பி. 1291-ல் ஒரு கூட்டாட்சியை உண்டாக்கிக் கொண்டன. அந்தக் கூட்டாட்சிமுறை வளர்ந்து, இன்று 22 'கான்டன்'களைக் கொண்ட பொதுக்கூட்டாட்சியாக இருக்கிறது.

'கான்டன்' என்பது, நமது நாட்டில் உள்ள ஒரு தாலுகா அளவு இருக்கும். 22 'கான்டன்'கள் சேர்ந்து உள்ள சுவிட்சர்லாந்து பொதுக் கூட்டாட்சியின் மொத்தப் பரப்பு 15,944 சதுரமைல் தான்; மொத்த மக்கள் தொகை 30 இலட்சம்!

சுவிட்சர்லாந்து மக்களில் 53 சதவீதத்தினர் பிராடஸ்டண்ட் மதப் பிரிவினர்; 45 சதவீதத்தினர் கத்தோலிக்கப் பரம்பரையினர்; இவர்களிடையே மதப்பூசல் என்றைக்கும் வந்ததில்லையாம்!

மொழிப் பாதுகாப்பில் சுவிட்சர்லாந்து ஓர் எடுத்துக்காட்டாக இருப்பது பலருக்கும் தெரிந்ததே! ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ரோமான்ஸ் ஆகிய நான்கும் ஆட்சி மொழிகளாக அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன!

மக்கள் தொகையில் 72 சதவீதத்தினர் ஜெர்மன் மொழியையும் (இது 'ஸ்விஸ்டாயிட்ஸ்' என்று வழங்கப்படுவதாகும்), 21 சதவீதத்தினர் பிரெஞ்சு மொழியையும், 6 சதவீதத்தினர் இத்தாலி மொழியையும் பேசுகின்றனர். ரோமான்ஸ் என்ற மொழி, ஒரு சதவீதத்துக்கும் குறைவான மக்களால் பேசப்பட்டபோதிலும் — அதாவது 50 ஆயிரம் பேர்களே பேசியபோதிலும்— அதற்கும், 'ஆட்சி மொழி' என்ற மதிப்புத் தரப்படுகிறது.

தொழிற் துறையிலும், வாணிபத்திலும், பிரயாண விடுதிகளிலும் உள்ளவர்கள், ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருக்கின்றனர்!

சுவிட்சர்லாந்துக்கு அவர்கள் நாட்டு வரலாற்றில் தரப்படும் பெயர், 'ஹெலிவிடிகா' என்பதாகும். சுவிட்சர்லாந்து பொதுக்கூட்டாட்சிக்கு 'கன்பெடரேடியோ ஹெலிவிடிகா' என்று பெயர் தரப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து நாணயங்களில் அந்தப் பெயர்தான் பொறிக்கப்பட்டுள்ளது.

பல பேரரசுகளின் மத்தியில் சுவிட்சர்லாந்து பொதுக் கூட்டாட்சி நீடித்துவருகிறது. ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளால் சூழப்பட்டு இருந்தபோதிலும், சுவிட்சர்லாந்து எந்தப் போரிலும் சிக்காமல் இருந்துவருகிறது.

1648-லிருந்து—கடந்த 320 ஆண்டுக்காலத்தில்—சுவிட்சர்லாந்தில், சண்டை எதுவும் நடைபெறவே இல்லையாம்!

ஜெனிவாவில் நான் தங்கியிருந்தது இரண்டு நாட்களுக்கும் சற்று குறைவானதாகும். ஆகஸ்டு 17-ந் தேதி மாலை 6-30 மணிக்குச் சென்று, 19-ந் தேதி நண்பகல் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்தவர்கள் உதவியாக இருந்தனர். உலக வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் திரு. பார்த்தசாரதி அவர்கள் துணை நின்று உதவியதுடன், பல இடங்களுக்கும் தமது காரில் அழைத்துச் சென்றும் காட்டிவந்தார்.

ஜெனிவா நகரின் பழைய பகுதியில் உள்ள பல்கலைக் கழகத்தையும், மறுகரையில் உள்ள உலக அமைப்பு நிலையங்களையும், இரண்டாவது நாள் மாலை ஜூரா மலைப் பகுதியையும் அவர் காட்டினுர்.

ஜூரா மலைத்தொடர் ஜெனிவா ஏரியை ஒட்டியிருக்கிறது. மலைப் பகுதியில் மரங்களடர்ந்த காடுகளும், வயல்வெளிகளும், தோட்டங்களும், இவைகளுக்கிடையில் ஆங்காங்கு ஊர்களும் இருக்கின்றன.

ஊர்கள் என்ருல் சிறு அளவில்—50 அல்லது 100 வீடுகள் அளவில் இருக்கின்றன. அந்தச் சிறு அளவில், கடை, வங்கி, அஞ்சல் நிலையம் போன்ற வசதிகள் இருக்கின்றன. வீதிகளும், வீடுகளும் தூய்மையாக விளங்குகின்றன.

திரு. பார்த்தசாரதி அவர்களுடன் உலகத் தந்திப் போக்குவரத்தில் பணியாற்றும் சுந்தரம் அவர்களும், திரு. வரதராசன் அவர்களும் வந்திருந்தனர்.

சுவிட்சர்லாந்தின் பரப்பில் மூன்றில் இரண்டு பகுதி மலையாக இருக்கிறது; சமவெளியாக மூன்றில் ஒரு பகுதியே இருக்கிறது. சமவெளிப் பகுதியில் பெரும்பாலான மக்கள் வாழ்கின்றனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

# வளர்ச்சியுமில்லை---வாங்கிய கடனை அடைக்கும் வல்லமையுமில்லை!

## கடன் பெருகுகிற அளவுக்கு ஏற்றுமதிகளைப் பெருக்கிக்கொள்ளவில்லை!

### இந்தியாவின் சாதனை--உலக பாங்கி தரும் நற்சான்று

வளர்ச்சித் திட்டங்களின் பெயரால் கடனுகவும் மானியமாகவும்—கிடைக்கும் இடங்களிலெல்லாம் இந்தியா பெற்றுவருவதும், அப்படிப் பெற்ற பணத்தைக்கொண்டு நிறைவேற்றப்படும் திட்டங்களினுல் உருப்படியான பலனைக் காண முடியாமல் விழிப்பதும், பலமுறை - பலராலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உண்மைகளாகும்!

திட்டங்களுக்குக் கடனளித்துவரும் உலக பாங்கியே இப்போது இந்தியாவின் இரங்கத்தக்க நிலை கண்டு ஐயமும் அச்சமும் தெரிவித்துள்ளது!

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலேயே குறிப்பாக இந்தியாவின் கடன் பளு மிகுந்துள்ளதாகக் குறிப்பிட்டு அது கவலை தெரிவித்துள்ளது!

"வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதி கூடவில்லை; அவற்றிற்குத் தரப்படும் கடன்களோ, மானியங்களைக் காட்டிலும் கூடுதலாக இருக்கின்றன; தேவையான பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அந்த நாடுகளுக்குப் போதிய பணவசதி இல்லை; இதன் விளைவே, வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் கடன் பளு கூடுவதற்குக் காரணம்"

என்று, உலக பாங்கியின் 1966—67-ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

"கடன் நிபந்தனைகள் சம்பந்தமாகப் பல நாடுகளைக் காட்டிலும் இந்தியாவுக்கு அதிகச் சலுகைகள் தரப்பட்டுள்ளன; எனினும், அந்தச் சலுகைகள் கடனைத் திரும்பத் தருவதற்கு, இந்தியாவினுல் இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடன் சுமை கூடுவதற்கேற்ப ஏற்றுமதியின் அளவு கூடவில்லை.

1966-ஆம் ஆண்டு ஜுன் 30-ஆம் நாள்வரை வளர்ச்சியடைந்துவரும் 95 நாடுகளுக்கு மொத்தம் 4,110 கோடி டாலர் (ரூ. 30,825 கோடி) கடன் தரப்பட்டிருந்தது; அதில் இந்தியாவுக்குக் கிடைத்தது மட்டும் ரூ. 690 கோடி டாலர் (ரூ. 5,175 கோடி).

1966-ல் இந்தியா தனது ஏற்றுமதி மூலம் கிடைத்துவந்த வெளிநாட்டுச் செலாவணியில் 22 சதவிகிதத்தைக் கடனைத் திருப்பித் தருவதற்குப் பயன்படுத்தி வந்தது.

பிரேசில் நாடு மட்டுமே தனது ஏற்றுமதி வருமானத்தில், இந்தியாவைவிட அதிகமாக அதாவது 29 சதவிகிதத்தைக் கடனைத் திருப்பித்தரப் பயன்படுத்தி வந்தது.

வளர்ச்சியடையும் நாடுகளில்பல, தமக்குத் தரப்பட்டுள்ள கடனைத் திறமையாகப் பயன்படுத்தியுள்ளன; ஆனுல் அவற்றின் ஏற்றுமதி அதிகரிக்காததால், பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ள முடியவில்லை; அதனுல் கடன் சுமையே வேகமாகப் பெருகியுள்ளது.

1962 முதல் 1966 வரை கிழக்காசியாவின் கடன் சுமை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. தென் ஆசியாவிலும் (குறிப்பாக இந்தியா—பாகிஸ்தான்) ஆப்பிரிக்காவிலும் 75 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

1966-ல் இந்தியாவின் கடன் பளு 84 சதவிகிதம் அதிகரித்தது; ஆனுல் இந்தியாவின் ஏற்றுமதியோ 14 சதவிகிதம் மட்டுமே பெருகியது.

வளர்ச்சியடையும் நாடுகளில் வேளாண்மை உற்பத்தியின் வேகமும் மந்தமாகவே உள்ளது.

இந்த நாடுகளெல்லாம், தம் பொருளாதாரப் பிரச்சினைகளை இன்னும் திறமையுடன் அணுகிச் செயல்பட வேண்டும். மேலும், பொருளாதார வளர்ச்சிக்கு முதலிடம் தரவேண்டும்."

# அண்ணு தமிழ்ச் சுருக்கெழுத்துக் கல்லூரி

## இலவச வகுப்பில் சேருவதற்கு வாய்ப்பு

அண்ணு பிறந்த நாளான செப்டம்பர் 15 முதல் ஏழை மாணவர்களுக்கும், பின்தங்கிய மாணவர்களுக்கும் இலவசமாகத் தமிழ்ச் சுருக்கெழுத்து வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழக அரசு ஆண்டுதோறும் நடத்திவரும் தமிழ்ச்சுருக்கெழுத்து—கீழ் நிலை (Lower Grade), உயர் நிலை (Higher Grade), உயர் வேகம் (High Speed) ஆகிய தேர்வுகளுக்கு மாணவர்கள் ஆஜராகும் வகையில் உயர்ந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்ச் சுருக்கெழுத்து வகுப்புகளில் சேர விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் கல்லூரி முதல்வரைச் சந்திக்கலாம்:—

(தொடர்ச்சி 5-ம் பத்தி பார்க்க)

அரசியலுக்கு அப்பால்!

# பிள்ளையோ பிள்ளை!

பிள்ளை ஒரு தொல்லையாக இருப்பது இந்தியாவில்தான்! இன்னும் சற்று விரிவாகச் சொன்னுல், ஆசிய நாடுகளில்தான்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், 'பிள்ளையோ பிள்ளை' என்ற குரலை, வேறு வகையில் முழக்குகின்றனர்!

இங்கு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக எவ்வளவு பிரயத்தனங்கள் உண்டோ அது போலவே கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் குழந்தைகள் அதிகமாகப் பிறக்க வேண்டும் என்பதற்காகப் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன.

போலந்து, அல்பேனியா ஆகிய இரு நாடுகள் நீக்கி, ஏறக்குறைய எல்லாக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், 'குழந்தைகள் இல்லாத நிலை'யைப் பெற்றிருக்கின்றன! 'பிள்ளைகள் பல தேவை' என்பது அவர்களது கோரிக்கையாக இருக்கிறது!

ருமேனியா, 'அதிகப் பிள்ளைகளைப் பெறுங்கள்' என்று மக்களை மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறது!

'விவாக ரத்துக்கள் மலிந்தால், அதன் மூலம் மக்கள் தொகை பெருகுவது பாதிக்கப்பட்டு விடுமோ' என்று பயந்து, ருமேனிய அரசு, விவாக ரத்துக்களை அதிக அளவுக்குக் கட்டுப்படுத்தி வருகிறது!

அப்படியே அனுமதித்தாலும், தரவேண்டிய வாழ்க்கைச் செலவுத் தொகையைக் கட்டாயப்படுத்தியும், அதிகரித்தும் வருகிறது அந்த நாடு!

கருச் சிதைவு சட்டபூர்வமாகத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது ருமேனியாவில்! குழந்தைகள் இல்லாத தம்பதிகள்—திருமணமாகாத ஆண் - பெண்கள் அனைவரும், அங்கே சட்டத்தின் கோபப் பார்வைக்கு ஆளாகின்றனர்! அதிக வரி கொடுமைக்கு ஆட்படுத்தப்படுகின்றனர்!

குழந்தைகளுக்கும் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கும் அங்கே அமோக செல்வாக்கு — அரசாங்க உபசரிப்பு!

சிறுவர்களுக்கான வசதிமிக்க பள்ளிகள்—எழில் கொழிக்கும் விளையாடுமிடங்கள் ருமேனியாவில் ஏராளம்; ஏன் தெரியுமா?—'பெற்றவர்களுக்கு எவ்விதச் சிரமமும் பிள்ளைகளால் ஏற்படக் கூடாது' என்பதற்காக!

இப்பிரச்சினையில் அங்கேரி, ருமேனியாவைப் பின்னுக்குத் தள்ளுகிறது! அங்கே ஆயிரம் பேர்களுக்கு 12 பேர்கள்தான் பிள்ளைச் செல்வத்தை உடையவர்களாக இருக்கிருர்கள்! ஐரோப்பாவிலேயே இப்படிப்பட்ட குறைந்த 'குழந்தை வள'த்தையுடைய நாடு வேறெதுவும் இல்லை!

நாளுக்கு நாள் 'கிழவர்கள் பெருகுகிருர்களே தவிர, 'அந்த அளவுக்குப் புதிய பரம்பரையைக் காணுேமே' என்று—கவலை மிகக் கொள்ளுகிறது அங்கேரி அரசு! ஏனெனில், நாட்டின் தொழில் உற்பத்திக்குத் தேவைப்படுபவர்கள் இளைஞர்களே தவிர, 'பென்ஷன்' பெறுபவர்கள் அல்லரே!

எனவே, 'பிள்ளைகளைப் பெறுங்கள்; அதுவும் அதிகமாகப் பெறுங்கள்' என்று அதிகார முறையில் மக்களைக் கேட்டுக் கொள்கிறது—அந்த நாடு!

"குடும்பம் நிலைப்பதும் பெயர் சொல்வதும் குழந்தைகளினுல்தான்; பிள்ளைச் செல்வத்தினின்றும் கிடைப்பதுதான் வாழ்க்கையில் பெரிய மகிழ்ச்சி" என்றெல்லாம்—வியாபாரத் தோரணையில்—பிரச்சாரம் செய்கிறது அங்கேரி!

செக்கோஸ்லோவேகியா, இந்த இரு நாடுகளையும்விட பல படிகள், இத்துறையில் தீவிரம் காட்டுகிறது!

பிள்ளைகளைப் பெறும் எல்லாப் பெண்களுக்கும் அங்கே வேலை வாய்ப்புத் தரப்படுகிறது. அது மட்டுமல்ல; குழந்தைகள் அதிகமாகப் பெறும் தாய்மார்களுக்குச் சம்பளத்துடன்கூடிய விடுமுறையும் உண்டு!

இதில் இன்னும் சற்று விரசமான அதிசயமும் இருக்கிறது அது இது:—

அதிகக் குழந்தைகளைப் பெறும் தாய்மார்கள்—திருமணமாகாதவர்களுக்குக்கூட — சட்டப்படி அங்கே சம்பளத்துடன்கூடிய விடுமுறை வசதிகள் தரப்படுகிறதாம்! —எஸ். ஆர்.

உணர்வோர் உள்ளம்

# பாசிச அமைப்புக்கு உரமூட்டும் இந்தி வெறி!

"தமிழக அரசு மும்மொழித் திட்டத்தின்கீழ் 'சிறப்புத் தமிழ்' கற்பிக்க ஏற்பாடுகள் செய்வதன் மூலம் மாநில மக்களுக்கு நன்மையைக் காட்டிலும் தீமையே அதிகம் விளையும். ஏனெனில், எப்படியும் என்ருவது ஒருநாள் இந்தி, நாட்டின் ஆட்சிமொழி ஆகத் தானே போகிறது? அப்பொழுது அனைத்திந்தியத் துறைகளில் பணியாற்றும் பொதுமக்களுக்கு இதனுல் பெருத்த தீங்கு ஏற்படும்" என்று ஓர் இந்தி ஏடு ('தினமான்') எழுதியுள்ளது.

"தமிழ் மக்களை அது இப்படி மிரட்டியுள்ளது; அல்லது, அவர்களுக்காக முதலைக்கண்ணீர் வடித்துள்ளது" என்று சொன்னுல் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

'இந்தி பேசாத மக்கள் விரும்பும் பொழுதுதான் இந்தி ஆட்சிமொழியாகும்'—'அவர்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கும்'—என்றெல்லாம் நேரு தந்த வாக்குறுதிகள் என்னவாயின என்று கேட்காமல், இந்த இந்தி ஆதரவாளர்கள், இப்படியெல்லாம் ஏன் எழுதுகிருர்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதே இந்தி ஏடு, மராட்டிர 'சிவசேனை'யைப் பற்றி எழுதும் பொழுது, அதை, 'இனவெறி பிடித்த ஓர் (பாசிஸ்டு) அமைப்பு' என்று எழுதியுள்ளது.

"மாராட்டிர மக்களுக்குப் போதிய வேலைவாய்ப்புகள் கிடைக்காமலிருப்பதற்குக் காரணம் ஆங்கில மொழியே; மாராட்டிரத்திலுள்ள பொதுமக்களுக்கு ஆங்கில அறிவு மிகவும் குறைவு; எனவே, ஆங்கில அறிவு பெற்றுள்ள தென்னிந்திய மக்கள், வெகு எளிதாக வேலைகளில் அமர்ந்துவிடுகிருர்கள்...... மாராட்டிர மக்களின் தொல்லைகள் நீங்க வேண்டுமானுல், அதற்கான ஒரே வழி, ஆங்கில ஆதிக்கத்தை அப்புறப்படுத்துவதுதான்" என்றும் அது எழுதியுள்ளது.

மாநில மொழிகளுக்கு ஆக்கம் தேடித் தருவதாகக் கூறிக் கொண்டு, எப்படியாவது ஆங்கிலத்தை ஒழித்துக்கட்ட வேண்டும்; இதனுல் பாசிஸ்டு அமைப்புகள் வளர்ந்தாலும் பரவாயில்லை—என்ற இந்திக்காரர்களின் உள்நோக்கம் புரிகிறதல்லவா?

சில ஆண்டுகட்கு முன்பாக டில்லி 'இந்துஸ்தான்' ஏடு, தட்சிண பாரத இந்தி சபையைச் சேர்ந்த எம். சத்யநாராயணுவின் பேட்டியொன்றை வெளியிட்டிருந்தது; அதில் அவர், 'தென்னிந்திய மாநிலங்களை இணைத்து வைத்திருப்பது ஆங்கிலம்தான்; எனவே, ஆங்கிலம் அகன்றவுடன் தென்னிந்தியர்கள் வேறு வழியில்லாமல் இந்தி கற்க நேரிடும்' எனக் கூறியிருந்தார்.

'இந்தியாவில் ஒற்றுமையை நிலைநாட்ட இந்தியைப் பரப்புகிறோம்' என்று இந்தி ஆதரவாளர்கள் கூறிவந்த காலம் போய், இப்பொழுது அவர்கள், 'இந்தி பரவுவதற்காக ஆங்கிலம் விலக வேண்டும்' என்று கூறத் தொடங்கியுள்ளனர்.

'ஆங்கிலம்தான் ஒற்றுமையை வளர்த்துவருகிறதே' என்று நாம் கேட்டால், 'ஒற்றுமை குலைந்தாலும் பரவாயில்லை; இந்தி வர வேண்டும்' என்று தங்களையும் அறியாமல் அவர்கள் கூறிவருகிருர்கள்!

'நடக்கவேண்டுமானுல் முதலில் கால்களை வெட்டிவிட வேண்டும்' என்று அவர்கள் கோருகிருர்கள்!

'கால்களை இழந்து எப்படி நடப்பது?' என்று நாம் கேட்டால், 'ஆங்கிலத்தின் கால்களைத்தானே நாங்கள் வெட்டச் செல்கிருேம்' என்கிருர்கள் அவர்கள்!

இதையெல்லாம் பார்க்கும் பொழுது, 'நல்ல வேளையாகக் காந்தியடிகள் இன்றைக்கு நம்மிடையே உயிரோடு இல்லையே' என்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

ஜி. சீனிவாசன்
பெங்களூர்

(3-ம் பத்தியின் தொடர்ச்சி)

அண்ணு தமிழ்ச் சுருக்கெழுத்துக் கல்லூரி, 7-வது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தைவெளிப் பாக்கம், சென்னை-28.

தமிழக அரசின் ஆட்சி, தமிழ் மொழியில் சிறப்புற நடைபெறப் பேருதவியாக இருக்கும் வகையில் தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றைத் தமிழக அரசினர் ஆட்சி மொழிக் குழுவின் மூலம் வெளியிட்டுள்ளனர்.

தமிழக அரசுத் தேர்வு ஆணையாளர் அவர்களால் நடத்தப்பட்டு வரும் தமிழ்ச் சுருக்கெழுத்துத் (கீழ்நிலை, உயர்நிலை, உயர் வேகம்) தேர்வுகளுக்கு அரசு ஊழியர்கள் யாவரும் தேர்வுக் கட்டணமின்றி அமரலாம்.

ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர்கள் பெறும் சுருக்கெழுத்து அலவன்சைவிட தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களுக்குச் சுருக்கெழுத்து அலவன்சு அதிகமாக அளிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## வருந்துகிருேம்

சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. ஆதித்தனுர் அவர்களுடைய தங்கை திருமதி கமலாம்மாள், கடந்த 21—9—67 அன்று திருச்செந்தூரில் இயற்கையெய்திய செய்தியறிந்து வருந்துகிருேம்.

அன்னுரைப் பிரிந்து துயருறும் திரு. ஆதித்தனுர் அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக. (ஆ-ர்.)

# ஜெனிவா---[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இயற்கைவளம் அதிகமில்லாத சுவிட்சர்லாந்து நாடு, தனது தொழில் திறமையால் நல்ல வாழ்க்கை வளத்தைப் பெற்றிருக்கிறது.

சுவிட்சர்லாந்து என்றதும் முதலில் நினைவுக்கு வருவது கடிகாரம்தான்! உலக உற்பத்தியில் 100-க்கு 50 கடிகாரங்கள் சுவிட்சர்லாந்தில் செய்யப்படுகின்றன. கடிகார உற்பத்தியைப் போன்று, நுண்பொருள் அளவுக் கருவிகள் பல அங்கு செய்யப்படுகின்றன. ஆயினும், சுவிட்சர்லாந்தின் முக்கிய தொழில்கள்—இரசாயனப் பொருள்கள், மருந்துகள், இயந்திரங்கள் தயாரிப்பதாகும். சுவிட்சர்லாந்தின் உற்பத்தி அளவில் கடிகாரம் ஆருவது இடத்தைத்தான் வகிக்கிறது!

முதலாவது உலகப் போருக்குப் பின் உண்டாக்கப்பட்ட 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ற உலகப் பொது அமைப்பு ஜெனிவாவில் நிறுவப்பட்டது. அதற்குக் கட்டப்பட்ட சட்டிடம் அங்கு—ஜெனிவா ஏரிக்கரையில்—இருக்கிறது. உலகப் பொது மாநாடுகள் பல அங்கு இன்றும் கூடுகின்றன. ஐக்கிய நாடுகளின்கீழ் பணியாற்றும் பல உலக அமைப்புகள் அங்கு இருக்கின்றன.

உலகச் சுகாதார அமைப்பு, உலக வானிலை ஆராய்ச்சி நிலையம், உலகத் தந்திப் போக்குவரத்து அமைப்பு, உலக வாணிப—பாதுகாவல் துறையின் அமைப்பு, உலகத் தொழிலாளர் நிறுவனம் ஆகியவை ஜெனிவாவைத் தலைமை இடமாகக்கொண்டு இயங்குகின்றன. செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகமும் ஜெனிவாவில் இருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் அவையின் பல அமைப்புகள் சுவிட்சர்லாந்தில் இருந்தபோதிலும், சுவிட்சர்லாந்து இன்னமும் ஐ. நா. அவையில் உறுப்பினராகச் சேரவில்லை. சுவிட்சர்லாந்து, ஒரு பார்வையாளரை ஐ. நா. சபைக் கூட்டத்துக்கு அனுப்பி வைக்கிறது.

## தமிழ்க் குரல்!

ஜெனிவா ஏரியில் ஒரு படகில் நான் சுற்றி வந்து கொண்டிருக்கும்பொழுது, ஒரு மாணவர் என் அருகில் வந்து 'வணக்கம்' என்ருர்; தமிழ் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்; 'நானும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன்தான்! மேற்படிப்புக்காக வெளிநாடு சென்று திரும்புகிறேன்! தமிழ் நாட்டைவிட்டு ஓர் ஆண்டுக்கு மேல் ஆகிறது; இப்பொழுது தமிழ்நாட்டில் அண்ணு தலைமையில் ஆட்சி வந்திருக்கிறதே—எப்படி இருக்கிறது? பத்திரிகைகளில் படிக்கும்பொழுது நன்ருக இருக்கிறது — எப்படி இருக்கிறது? நீங்கள் சொல்லுங்கள்—சற்றுக் காதாரக் கேட்க வேண்டும் போலிருக்கிறது' என்று நிறுத்தாமல் கேட்டார்!

ஜெனிவா ஏரியில் உலவினுலும், காவிரியாற்றுக் கரை, தமிழனின் உள்ளத்தை விட்டு அகலாது!"

# மத்திய அரசின் முறையற்ற போக்கு!

## முதலமைச்சர்கள் மாநாட்டில் மதியழகன் கண்டனம்

புதுடில்லி, செப். 28—

டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், உணவுப் பொருட்களை மாநிலங்களிடையே வழங்குவதில் மத்திய அரசு நடந்துகொள்ளும் முறையற்ற போக்கினைக் கண்டித்தார்; 'தமிழ் நாட்டுக்குப் பருப்பு வருவதற்கு தடைவிதித்திருப்பது ஏன்?' என வினவினார்.

மாநாட்டில், டில்லி அரசின் பாரபட்சமான போக்கைக் கண்டித்து அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசியதாவது:—

"தமிழ் நாட்டுக்கு, ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் பருப்பு வகைகள் தேவைப்படுகின்றன; ஆனால் டில்லி அரசு, தமிழ் நாட்டுக்கு இந்த ஆண்டில் — இதுவரையில 5 ஆயிரம் டன் பருப்புதான் கொடுத்திருக்கிறது.

அரியானா, மத்தியப் பிரதேசம் முதலிய மாநிலங்கள், அங்கிருந்து பருப்பு அனுப்புவதற்குத் தடை விதித்துள்ளன. அந்தத் தடையை நீக்கும்படி டில்லி அரசு கூறவேண்டும்; இல்லாவிட்டால் அந்த மாநிலங்களில் உள்ள அதிகப்படியான பருப்பை பற்றுக்குறை மாநிலங்களுக்கு கொடுக்க டில்லி அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது, தமிழ் நாட்டு வியாபாரிகளை பருப்பு வகைகள் அதிகமாக இருக்கும் மாநிலங்களிலிருந்து பருப்பு வாங்க அனுமதிக்க வேண்டும்.

தமிழ் நாடு தனது அரிசி உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறது; தேவைக்குப் போக மீதி உள்ளதை பற்றுக்குறை மாநிலங்களுக்கு கொடுக்கவும் தயாராக இருக்கிறது; அப்படி இருந்தும், எங்களுக்குத் தேவைப்படும் பருப்பு வகைகளைப் பெற நாங்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறோம்!

டில்லி அரசு தேசிய ஒருமைப்பாடு குறித்தும் தேசிய உணவுக் கொள்கை குறித்தும் பேசுகிறது; ஆனால், டில்லி அரசின் இந்த பாரபட்சப் போக்கு ஒருமைப்பாட்டை ஏற்படுத்தாது!

### கோதுமை ஒதுக்கீட்டிலும்!

கோதுமை ஒதுக்கீட்டிலும் தமிழ்நாட்டிற்கு மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டு வந்த கோதுமையின் அளவில் மூன்றில் ஒரு பங்குதான் இந்த ஆண்டு தமிழ்நாட்டுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

1965-ம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு 61,700 டன் கோதுமையும், ஒரு இலட்சம் டன் கோதுமைப் பொருட்களும் அனுப்பப்பட்டன; 1966-ம் ஆண்டில் 1 இலட்சத்து 16 ஆயிரம் டன் கோதுமையும், 1 இலட்சத்து 65 ஆயிரம் டன் கோதுமைப் பொருட்களும் தமிழ்நாட்டுக்கு டில்லி அரசு அனுப்பி இருக்கிறது.

**ஆனால் 1967-ம் ஆண்டில் இதுவரை தமிழ்நாட்டுக்கு 39 ஆயிரத்து 500 டன் கோதுமையும், 87 ஆயிரம் டன் கோதுமைப் பொருட்களையும் மட்டுமே டில்லி அரசு அனுப்பியிருக்கிறது.**

ஆகவே, டில்லி அரசு உடனே தமிழ்நாட்டுக்கு 1-இலட்சத்து 25 ஆயிரம் டன் கோதுமையும், 1 இலட்சத்து 50 ஆயிரம் டன் கோதுமைப் பொருட்களையும் அனுப்பிவைக்க வேண்டும்.

### சர்க்கரை வழங்குவதிலும்!

சர்க்கரை பற்றி டில்லி அரசு கடைபிடிக்கும் கொள்கையும் தவறானது. சர்க்கரை உற்பத்தியில் 60 சதவீதத்தைக் கட்டுப்பாடு விலையிலும், மீதி 40 சதவீதத்தை வெளியிலும் விற்கலாம் என்று அனுமதித்திருப்பது சரியான கொள்கை அல்ல!

முன்பெல்லாம் தமிழ்நாட்டுக்கு 16 ஆயிரம் டன் சர்க்கரை கிடைத்துவந்தது; அது தற்போது 9 ஆயிரத்து 500 டன்னாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் சர்க்கரைக்குக் கடும் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது.

கண்டசாரி சர்க்கரையையும் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு எடுத்துச்செல்லத் தடை விதிக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டு அரசின் வேண்டுகோளுக்கு டில்லி அரசு ஒப்புதல் தரவேண்டும்."

## பதிவேடு

கடந்த மார்ச் முதல் ஜூலை முடிய நாட்டில் நடந்துள்ள மொத்த 'கேரோ'க்களின் எண்ணிக்கை 515 ஆகும்!

அவைகளில் 460 'கேரோ'க்கள், வங்காள மாநிலத்தில் நடைபெற்றிருக்கின்றன!

## கேரள அரசு நீடித்து நிற்கும்!

### நம்பூதிரிபாடு நம்பிக்கை

கூட்டு அமைச்சரவையில் பல கருத்து மாற்றங்கள் இருக்கத்தான் செய்யும்; ஆனால் அதற்காக, அமைச்சரவையே கவிழ்ந்துவிடும் என எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் ஏமாறத்தான் போகிறார்கள்; என்னுடைய அமைச்சரவை நீடித்து நிற்கும்"

என்று கேரள முதலமைச்சர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு, புதுடில்லியில் பத்திரிகையாளர்களிடையே தெரிவித்திருக்கிறார்.

## நிதிப் பற்றுக்குறை— புதுக் கல்லூரிகள் கிடையாதாம்

### கேரள அரசு அறிக்கை

★

"மேற்கொண்டு புதிதாகக் கல்லூரிகள் எதுவும் துவக்கப் படமாட்டாது"

என்று கேரள அரசு பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்திருக்கிறது.

"மாநிலத்தின் நிதித் தட்டுப்பாடே இதற்குக் காரணம்" எனவும் அதில் விளக்கப்பட்டிருக்கிறது.

"பொது அமைப்புகள்—இடம்—நிதி போன்றவைகளைத் தருவதாக வாக்களித்த போதிலும், கூடுதலாக அரசினரும் உரிய தொகையைச் செலவழிக்கும் நிலையில் இல்லையாதலால், புதிய கல்லூரிகள் எதுவும் திறக்கப்படும் நிலை இல்லை" என அரசு அறிவித்துள்ளது,

## தென் சென்னை மக்களவைத் தொகுதி இடைத் தேர்தல்

### முதலமைச்சர் தகவல்

"தென் சென்னை நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிக்கான இடைத் தேர்தலை, இவ்வாண்டு நவம்பர் 3-ந்தேதி நடத்தலாம் என்று தமிழக அரசு தெரிவித்திருந்த யோசனையை, தேர்தல் குழு ஏற்றுக் கொண்டுவிட்டது; இது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும்."

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

## அமைச்சர் கருணாநிதி உடல்நிலை

### 'முழு ஓய்வு தேவை' என டாக்டர்கள் வற்புறுத்தல்

சென்னை, செப். 27—

பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் உடல்நிலை வேகமாகத் தேறிவருகிறது.

காயமடைந்த அவரது உதடுகளில் போடப்பட்ட தையல் வெள்ளி அல்லது சனியன்று பிரிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

அவருக்கு இன்று மோர் சாதமும் ரசம் சாதமும் நன்றாகக் கரைத்துக் கொடுக்கப்பட்டது.

'அவர் முழு ஓய்வில் இருக்க வேண்டும்' என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று அறிஞர் அண்ணா அவர்கள், இரண்டுமுறை மருத்துவமனைக்கு வந்திருந்து அமைச்சரைப் பார்த்துச் சென்றார்.

சுதந்தரக் கட்சித் தலைவர் பேராசிரியர் என். ஜி. ரங்கா, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி, செ. மாதவன் ஆகியோரும், சட்டமன்ற அவைத் தலைவர் ஆதித்தனார், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், கே. நாராயணசாமி (முதலியார்) ஆகியோரும் இன்று மருத்துவமனைக்கு வந்திருந்து அமைச்சரைப் பார்த்து உடல்நலம் விசாரித்துச் சென்றனர்.

## மதுரை எஸ். முத்து உடல்நிலை

அமைச்சருடன் கார் விபத்தில் சிக்கிக் காயமடைந்த மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் மதுரை எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களின் உடல்நிலை தேறி வருகிறது.

அவரது முழங்காலில் இரத்தம் கட்டியிருந்தது; இதனால் அவர் வலியால் அவதியுற்றார். அப்படிக் கட்டியிருந்த இரத்தம் 'இன்ஜக்ஷன்' மூலம் வெளியில் எடுக்கப்பட்டது. அதன் பின்னர் இப்போது வலி குறைந்துவிட்டதாக அவர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 [illegible] [illegible]

## நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

### 29--9--67

**சென்னை முதல் வட்டம்**

பர்மா எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 6-மணிக்கு தண்டையார்பேட்டை-நேத்தாஜி நகர் பர்மா தமிழர் காலனி--எண்ணூர் நெடுஞ்சாலையில்; தலைவர்: எம். ஆர். புருடோத்தமன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., நீலநாராயணன், எஸ். பி. சற்குணம், புலவர் எல்லமுத்து, மா. பாண்டியன், எம். பெருமாள், க. பா. சாமிநாதன், கா. சமது, எம். பி. இராமச்சந்திரன், டி. இராமகிருட்டினன், எம். பி. கிருட்டினன், விருதை வீரமணி.

**சின்னதாராபுரம்**

தி. மு. க. சார்பில் இரவு 8 மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர்: என். கந்தசாமி எம்.எல்.ஏ.; பேசுவோர்: சி. டி. தண்டபாணி எம்.பி., ஆர். என். இராமசாமி, பரமத்தி சண்முகம், எஸ். நல்லசாமி. பூ. ச. தண்டபாணி, டி கே. பெரியசாமி.

**புழல்**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கடை வீதியில்; தலைவர்: பா. நற்குணம்; பேசுவோர்: எஸ். பி. சற்குணம், அ. பொ. அரசு எம்.எல்.ஏ., பி. ஆர். அண்ணாமலை. (இரவு 9 மணிக்கு சதாசிவம் – மோகனா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**ஈரோடு**

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: ஆர். கருப்பண்ணன்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், மு. சின்னசாமி எம்.எல்.ஏ., செ. அரங்கராசன் எம்.சி., இ. ஏ. மதார்சா, நடேசன், சிந்தனையாளன்.

**பார்த்திபனூர்**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: இரா. ரெங்கன்; பேசுவோர்: டி. கே. சிறைமீட்டான் எம்.எல்.ஏ., கே. எஸ். சந்தானம், மாங்குடி மதியழகன், சுப. தங்கவேலன், எழில்மன்னன், இரா. அழகு, இரா. குருசாமி.

**நிலக்கோட்டை**

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு வ.உ சி. திடலில்; தலைவர்; இ. காத்தான்; பேசுவோர்: தேவகிபாண்டியன், செ. தம்பித்துரை, ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ., வீரப்பன்.

**தக்கோலம்**

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு எழில் மண்டபத்தில்; தலைவர்: ஏ. எல். சி. சஞ்சீவி எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் சாதிக்பாட்சா, என். வி. நடராசன் எம்.எல்.சி., கே.எம். இராசகோபால் எம். எல். ஏ., டி.கே. பொன்னுவேலு பி ஏ., வெ. சம்பந்தம், பி. சூடாமணி அம்மாள் எம்.சி., ஏ.சி. இராமநாதன், டி. செல்வர்.

**பழனி**

மஜீத் மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு நேரு திடலில்; தலைவர்: பி.எஸ். சேக் எம்.சி.; பேசுவோர்: மாங்குடி மதியழகன், மற்றும் பலர்.

**காடுபட்டி**

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: ப. பாண்டியன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., நீ. அன்புச்செழியன் எம்.பி., பி.எஸ். மணியம் எம்.எல்.ஏ., ஏ.முனியாண்டி எம்.எல்.ஏ., வி.எஸ்.எஸ். மணி எம்.எல் ஏ.. பொன். முத்துராமலிங்கம் பி.ஏ.,பி.எல்., கூ. குருசாமி.

**அருப்புக்கோட்டை**

திருவள்ளுவர் படிப்பகச் சார்பில் இரவு 7 மணிக்கு சாலியர் மகாசன பாவடித் தோப்பில்; தலைவர்: எம்.எஸ். இராமசாமி; பேசுவோர்: க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., சிவ. சண்முகசுந்தரனார்.

**காரைக்குடி**

எழுச்சி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: ஜே. அப்துல் காதர்; பேசுவோர்: துரை. முருகன் பி.ஏ., நாவளவன், பெரி. அழகு, சேவற்கொடியோன், சித. சிதம்பரம், பி. முத்துராமன், ஆ. குறள்பித்தன்.

### 30--9--67

**மேலபுலம்புதூர்**

தி.மு க. சார்பில் மாலை 6 மணிக்கு ஊராட்சி மன்றம் எதிரில்; தலைவர்: மு. வரதராசனார்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, எஸ்.கே. சம்பந்தம் எம்.பி., எஸ்.ஜே. இராமசாமி எம் எல்.ஏ., ஆர்.என். அரங்கநாதன் எம்.எல்.ஏ., என்.எஸ். பலராமன், கே.எம். எல்லப்பன், வி.எம். கோபால், கே.வி. பாலகிருட்டினன், எல்.வி. மாணிக்கம், கே.பி. நீலமேகன்.

அமைச்சர்

## மா. முத்துச்சாமி

### சுற்றுப்பயணம்

செப். 30: மாலை 4-30 மணி: காஞ்சிபுரம்—சுழல் குழு வரவேற்பு; மாலை 5 மணி: ராஜாஜி அங்காடி அருகில் குளிர்நீர்த் தொட்டி திறப்பு விழா; 5-30 மணி: காஞ்சிபுரம் நகராட்சி வரவேற்பு; இரவு 7 மணி: அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா.

அமைச்சர்

## சாதிக்பாட்சா

### சுற்றுப்பயணம்

செப். 28: மாலை 3-30 மணி: வாலாஜாபேட்டை — ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 4 மணி: வாணாபாடி—ஊராட்சி மன்ற வரவேற்பு; 4-30 மணி: நவலத்—ஊராட்சி மன்ற வரவேற்பு; 5-15 மணி: அல்லிகுளம்—பள்ளிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்; 6 மணி: அம்மூர் — பள்ளிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்; இரவு 7 மணி: இராணிப்பேட்டை—நகராட்சி மன்ற வரவேற்பு; 7-30 மணி: இராணிப்பேட்டை—பொதுமக்கள் வரவேற்பு.

அமைச்சர்

## இரா. நெடுஞ்செழியன்

### சுற்றுப்பயணம்

செப். 30 மாலை 5-30 மணி: பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாத் தலைமை.

அக். 1 மாலை 5-மணி: கருநாடக தி. மு. க. வரவேற்பு; மாலை 6-மணி: பெங்களூர் சீராமபுரம்—அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா.

## பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டிடக் கால்கோள் விழா

### அமைச்சர் நெடுஞ்செழியன் கலந்துகொள்ளுவார்

பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டிடக் கால்கோள் விழா, 30—9—67 மாலை 5-மணிக்கு ஒடுகத்தூர் மடம் அருகில் அண்ணாசாமி முதலியார் சாலையில் நடைபெறும்; அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் மைசூர் முதலமைச்சர் எஸ். நிஜலிங்கப்பா அடிக்கல் நாட்டுவார். தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநர் எம். ஆர். பெருமாள், காரைக்குடி சா. கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

## ஊர்வலம்

காரைக்குடி எழுச்சி மன்றச் சார்பில் 30-9-67 மாலை 3-மணிக்கு செஞ்சை நாவலர் மன்றத்திலிருந்து புறப்படும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் ஊர்வலத்தை எஸ். எஸ். முத்து தலைமையில் பெரி. அழகு துவக்கிவைப்பார்.